உ

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகக்
கொண்டவரும், காலஞ்சென்ற
சோ. கனகசபாபதிக் குருக்கள் அவர்களின்
சிரேஷ்ட புத்திரனும்
மாத்தளை. ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய
பிரதம குருவுமாகிய

பிரம்மஸ்ரீ

# க. பாலசுப்பிரமணிய சர்மா

அவர்களின்

# நினைவஞ்சலி பாமாலை

ஆங்கிரச ஸ்ரீல ஆவணி மீ 8 உ
24 - 8 - 1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மஸ்ரீ. க. சுப்பிரமணிய சர்மா அவர்கள்



தோற்றம்
1 - 8 - 1924

மறைவு
15 - 8 - 1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

உங்கள் உழைப்பின்
உயிர்ப்பில்
கல்வியில் சான்றோராய்
எங்களை யாக்கி,
எங்கள் உயர்வையே
உங்கள் உயிராக்கி,
எங்கள் இல்லத்தின்
ஒளி விளக்காய்
பிரகாசித்த ஐயா !
உங்கள் நினைவுகளுக்கு
இம்மலர் சமர்ப்பணம்.

பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய
பிரதம குருவாகிய

பிரம்ம ஸ்ரீ. க. பாலசுப்பிரமணிய சர்மா

அவர்களின்

மறைவு குறித்த

# நினைவாஞ்சலி பாமாலை

தோற்றம்: 1 - 08 - 1924

**வெண்பா**

கொக்குவில் பா ரத்வாஜ கோத்திரத்திலே குருக்கள்
நற்குலத்தில் ரத்தாதி ஆண் டாடித் - தக்க நாளி
பத்தேழி லே பால சுப்ர மணிய சர்மா
உய்த்தான் இவ் வையத் துயிர்!

பிரிவு: 15 - 08 - 1992

**வெண்பா**

ஆங்கி ரச வருடம் ஆடி முப்பத் தோராம் நாள்
தீங்குத் துதியைத் திதி வேளை - ஈங்கிருந்து
நீங்கின னால் பால சுப்ர மணிய சர்மா
ஏங்கியதே இந்த இகம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## அகவல்

தொன்மை மிகும் யாழ்ப்பாணக் கொக்குவிலூர் என்றாலே
நன்மைக்கும் வன்மைக்கும் ஞானச் செழுமைக்கும்
வண்மைக்கும் பெயர் பெற்றோர் வதியும் இடம் என்று
சொல்வார் எவரும்! அந்தச் சோதி மிகும் பொற்பதியில்
கோவிற் பணிக்குதித்த குருக்கள் குலமான
பாரத் வாஜப் பரம்பரைக் கோத்திரத்தில்
கனக சபாபதிக் குருக்கள், ஜா னகியம்மா
தம்பதிகளுக்குத் தலைமகனாய், ஆயிலிய
நட்சத் திரத்தில் பிரம்ம ஸ்ரீ பால
சுப்பிர மணிய சர்மா சுடர்ந்து, குலக் கல்வி
அத்தனையும் தேர்ந் தோர்ந்தே ஐந்தாம் தலைமுறையன்
ஆக, மலைநாட்டு மாத்தளை எனும் நகரில்
ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில் எனும்
ஆன்ற புகழ் பூத்த ஆலயத்திலே தலைமைக்
குருக்களாய் ஐம்பத்தாண் டாகத் திருப்பணிகள்
செய்த பெருமைகளைச் செப்புதற்குச் செந்தமிழில்
வார்த்தைகளோ போதாவே! வள்ளல் அவன் புகழைச்
சாற்றுதற்கு மீண்டும் ஒரு கம்பன் வரவேண்டும்!
முடியாதென்றாலும் முனைவோம் சிறிதளவில்!
நாட்டுக்கோட்டை நகர நன்மக்கள் நிர்வகிக்கும்
மாத்தளையூர்க் கதிர் வேலாயுத சுவாமி கோவில் புகழ்
நாற் றிற்கும் நன்கறியும்! நாடறிந்த அக் கோவில்
வரலாற்றுடன் பிணைந்து வளர்ந்த நெடுங் காலப்
பரம்பரையில் வந்தோனே பால சுப் பிரமணிய
சர்மா! அவன் தந்தை, தந்தைக்கு தந்தை என்றே
ஐந்துதலைமுறை, அவ் வாலயத்தின் தொன்மை தனைப்
பேணி வந்ததென்னும் பெருமைக்குரிய குலம்!
நித்திய பூஜை, நியமங்கள், உற்சவங்கள்
அத்தனையுமே ஆங்கே ஆண்டு முழுவதுமாய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலாகலமாய்க் குறையின்றியே நடக்கக்
காலாய் இருந்த கடவுட் பணிக் குடும்பம்!
மாத்தளை வாழ் இந்து மத மக்கள், தோட்டம் வாழ்
தொழிலாளர் குடும்பங்கள், சகல இனம் சார்ந்த
ஊர்ச் சனங்கள் எல்லோர் உயர்வுக்கும் மார்க்கத்
துறையிலே மட்டுமன்றிச் சமூக, கலாசாரக்
கலைசார் கிரியைச் சகல துறைகளிலும்
அரை நூற்றாண் டாக ஆற்றிய நற் சேவைகளால்
பால சுப் பிரமணிய சர்மாவை ஐயா ஐ
யா என்றே அன்பொழுக யாபேரும் போற்றிடுவர்!
சோதிடக் கலை வல்ல சுப்பிர மணிய சர்மா
முகத்தில் விழித்தாலே மோட்ச சுகம் என்பார்கள்!
சிரிப்பன்றி வேறறியாச் சீராளன்! சாந்த
சொரூபமே உருவான சுந்தரனின் மனைவிக்கும்
சௌந்தர வல்லி என்று சரியாய்ப் பெயர்ப் பொருத்தம்!
காலாதி காலக் காஷ்பக் கோத்திரத்தில்
கொக்குவில் மார்க் கண்டேயக் குருக்கள், லட்சுமியம்மா
தம்பதியர் புத்திரியாய்ப் பூரம் நட்சத்திரத்தில்
வந்துதித்த இரண்டே வயது குறைந்தவளாம்
சௌந்தர வல்லி தனைச் சர்மா கரம்பற்றிப்
பெற்ற நவமணிப் பிள்ளைகளோ ஒன்பது பேர்!
ஒன்பது பேருக்கும் உயர் கல்வி நலமூட்டி
ஆளாக்கிப் பேராக்கி அவர்களிலே நால்வருக்குச்
சீராய்த் திருமணத்தைச் செய்து வைத்துப் பத்துப் பேர்
பேரக் குழந்தைகளாய்ப் பெற்றுத் தழைத்த சர்மா
பெற்ற மகள் சொர்ண வல்லி முது மாணிப்
பட்டம் எய்தித் தேர்ந்து பத்மநா பய்யர் எனும்
விஞ்ஞானக் கலைமானி தன்னை வதுவை செய்து
வித்தியா, பூரணி, ஜனனி எனும் மூன்று
புத்திரிகள் தம்மைப் பூவில் தரிக்க விட்டு
ஆண் டைந்தின் முன்னே அடைந்தாள் பரம பதம்!
மூத்த மகன் ஜெகநாத சர்மா, தனலட்சுமி
என்னும் திருமகளை இன்மனையா ளாய்ப் பெற்று
கௌரி, திவாகரன், காயத்திரி என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மகப் பேறடைந்து முதன்மையுற வாழ்கின்றான்!
ஜெயலட்சுமி மகளோ ஸ்ரீ தரனைக் கைப்பிடித்து
கோதா லட்சுமியோடு சாருஸ்மதி என்னும்
இரு புத்திரிகளுடனும் இருக்கின்றாள் சௌக்கியமாய்
ஜெயானந்த சர்மா எனும் அடுத்த புத்திரனின்
மனைவி ரமா தேவி, மக்கள் பிரசன்னா,
பிரவீண் எனும் இரண்டு பேர்கள்! யோகானந்த
சர்மாவுடன் யோக ராணி, ஜெகதாம்
பிகை, பால ரஞ்சனி, கலாரஞ் சனி என்னும்
மீந்திருக்கும் பிள்ளைகளும் மிகச் சிறப்பாய் வாழ
வழிசெய்த சுப்பிர மணிய சர்மா ஐயாவின்
சோதரர்கள் மூவர், தையலம் பிகா, பத்ம
நாத குருக்கள், மனோன்மணி இம் மூவர் பெயர்!
குருக்கள் மனையாட்டியாய் வாய்த்தோளே ருக்குமணி!
மனோன்மணி மணந்தவித்த மைத்துனர் மோகனராஜா!
இத்தனைபேர் மட்டுமன்றி, எத்தனையோ உற்றாரும்
சுற்றத்தவரும் சூழ்ந்து வந்து கோவிலிலே
பக்தர்களாய் வந்தித்த பலகோடி மாந்தர்களும்
ஏங்கித் தவிக்க விட்டு சுப்பிர மணிய சர்மா
ஆங்கிரச வருடம் ஆடி முப்பத் தோராம் நாள்
சனிவாரம் திதி துதியை சதயம் நட்சத்திரத்தில்
இறைவன் அடி சார்ந்தான்! இனி அவனின் இன் முகத்தை
புன்சிரிப்பைக் காண்பதென்றோ? பொழிகின்ற மந்திரக்
குரலை இனிக் கேட்பதென்றோ? குருக்களையா? என்றோடி
வந்து தொல்லை தீர வழி கேட்டு மீள்வதென்றோ?
சோதிடங்கள் கேட்டுத் துயரங்கள் தீர்வதென்றோ?
மாத்தளை கதிர் வேலா யுத சுவாமி கோவில் என்று
சாற்றியதும் ஞாபகத்தில் சட்டென்று வருகின்ற
பால சுப்பிர மணிய சர்மா எனும் பெயரை,
பெயருக்குரியோனின் பெருமைகளை, இனிய
சுபாவத்தை யாவரையும் சுண்டி இழுக்கின்ற
பக்தி உருவத்தை, பரோப காரத்தை
என்றும் நினைவில் இருந்தகற்ற மாட்டோம் நாம்!
சென்று வருக ஐயா! சிரம் தாழ்த்தி விடை ஈந்தோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி இரங்கல்

### வெண்பா

ஆயுள் முழுதும் முருகனுக்கே அர்ப்பணித்த
நீயுள்ள போதே நிமிர்வானேன்! - தீயுண்டாய்!
தேயுண்டே போக எனைத் தேம்ப விட்டாய்! காலனால்
ஏயுண்டேன்! காப்பே தெனக்கு?

## மக்கள் இரங்கல்

### வெண்பா

பெற்றாய் நவமணிக ளாய் எம்மை! உன் ஆவி
அற்றக்கால் தாமே அறிந்தோம் உன் - வற்றாத
அன்பால் தவமணிகள் ஆயிரம்பேர் பெற்றவன் நீ
என்பது! எமை நீத்தனையே ஏன்?

## மருமக்கள் இரங்கல்

### வெண்பா

மருமக்கள் போலன்றி மக்களைப் போன்றே
பெருமையுடன் எங்களைப் பேணிக் - கருமங்கள்
யாவினிலும் பங்கேற்று யாத் தீர்த்த ஐயா! இப்
பாவிகளை யார் இனிக் காப் பார்?

## பேரப்பிள்ளைகள் இரங்கல்

### வெண்பா

அருகில் இருத்தி அரு மந் திரமும்
முருகன் மகிமைகளும் ஓதிக் - குருவாயும்
வாய்த்த எங்கள் தாத்தாவே! வாட எம்மை இங்கு விட்டு
நீத்தெங்கே போனாயோ நீ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதர சோதரிகள் இரங்கல்
### வெண்பா

பக்தி வழியிற் பயிற்றி எமக்கெல்லாம்
சக்தியாய் வாழ்ந்த சகோதரனே! - புத்திமதி
கூறிவழி காட்டக் குவலயத்தில் யார் இனி? நாம்
தேறிடுவ தெந்தத் தினம்?

## மைத்துனர் மைத்துனி இரங்கல்
### வெண்பா

கைத்துணையாய் எங்களுக்குக் காவலாய் வாய்த்திருந்த
மைத்துனனே! விட்டு மறைந்தாயே! - எத்தாலும்
தீராத் துயரில் திகைக்கின்றோம்! நிம்மதியோ
வாராது வாழும் வரை!

## தேற்றம்
### வெண்பா

வாழும் வரை இந்த வையகத்தில் துன்பங்கள்
நாளும் வரும் என்ற ஞானம் உறும்! - மாளும் நாள்
கொண்டு செல்வ தேது? குருக்கள் வழிப்படியே
தொண்டு செய்து தேறும் துயர்!

ஆக்கம்: சில்லையூர் செல்வராசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ தேவராயர் ஸ்வாமிகள் இயற்றிய

# கந்தர் சஷ்டி கவசம்

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைப்போம்
துன்பம்போம்; நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும்; நிமலரருள்
கந்தர் சஷ்டி கவசந்தனை

## குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர்வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச்சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய(ல்) நடஞ்செயும் மயில்வாகனனார்
கையில் வேலாலெனைக்
காக்கவென்று உவந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிற நிற நிறெண
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி ஐயும்
நிலை பெற்றென் முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீ(நீ)யும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிருதிண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன் மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற் சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
டிகுடிகு டிகுகுண டிகுண
நகநக நகநக நகநக நகன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிகுகுண டிகுடகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்த(ற)லை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவற் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அலகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினை காக்க
விழி செவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெற காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடையிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரலடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன் கை இரண்டும் முரண்வேல் காக்க
பின் கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்போழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்காமுனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் ஏற்படும் அண்ணலும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடி விழிந்தோடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்(ண்) முடி மடையும்
பாவைகளுடனேயே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஓட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
க்ட்டுட னங்கம் கதறிடக்கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்க
செக்குச் செக்கு செதில் செதிலாக
சொக்குச் செக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்துக் கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தண லதுவாக
விடு விடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்நரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யன் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயிர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் வயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரனை பருவரை யாப்பும்
எல்லாப்பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீயெனக் கருள்வாய்
ஈரேழுலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமராபதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தனிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத் துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன்யான் நெற்றியிலணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொர்ணமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவள் நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவன் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய் பிரியமளித்து
மைந்தனென்றன்பாம் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக் காலையில்
மாலையிம்
கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கத் துலங்கி
நேச முடனோர் நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒரு நாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசை மன்ன ரெண்பர் செயல தருளுவர்
மாற்றா ரெல்லாம் வந்துவணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மையளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிபொடி யாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லக்ஷ்மிகளில்
வீரலக்ஷ்மிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணித் தகைய தனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி பேற்றி
எனைத் தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மணமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ராசே
மயில் நடமிடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்கந்தர் வந்தனம்

லோகநாத ஸுரஸ் ரேஷ்ட்ட
ஸர்வஜ்ஞ கருணாகர I
ஷண்முகஸ்ய பரம் ஸ்தோத்ரம்
பாவனம் பாப நாஸனம் II
ஷட்வக்திரம் ஸிகிவாகனம் த்ரிணயனம்
சித்ராம்பரா லங்கிருதம் I
ஸக்திம் வஜ்ரமஸிம் த்ரிஸூலமபயம்
கேடகம் தனுஸ்சக்ரகம் II
பாஸம் குக்குட மங்குச வரதம்
தோர்ப்பிர்த்த தானம்ஸதா I
த்யாயே த்தீம்ஸித ஸித்திதம் சிவஸுதம்
ஸ்கந்தம் ஸுராராதிதம் II

## சுப்ரமண்ய த்வநி மந்த்ரம்

ஓ ஹ்ரீம் சிவ சிவ சக்தி ஹஸ்தாய
குக்குட த்வஜாய த்வாதசாக்ஷாய
சர்வ சத்ரூன் சம்ஹாரய சர்வ சக்தி தராய
சர்வ ரக்ஷா கராய ஓம் குமாராய ஸ்வாஹா)

## சுப்ரமணிய மாலா மந்த்ரம்

ஓம் சளம் சூம் சுப்ரமண்யாய
சக்தி ஹஸ்தாய ருக்யஜுஃ சாமாதர்வணாய
அசுர குல மர்த நாய யோகாய
யோகாதிபதயே சாந்தாய
சாந்த ரூபிணே சிவாய சிவ நந்தநாய
சருஷ்டி ப்ரியாய சர்வஞ்ஞாய ஹ்ருதயாய
ஷண்முகாய ஹ்ரீம் ச்ரீம் ஹ்ரீம் க்ஷம் குஹரவி
கங்கா லாய காலரூபிணே
சுர ராஜாய சுப்ரமண்யாய நம:
ஓம் நமோ பகவதே மஹா புருஷாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூரவாஹ நாய கௌரீ புத்ராய
ஈசாத்மஜாய ஸ்கந்த ஸ்வாமிநே குமாராய
தாரகாரயே ஷண்முகாய
த்வாதச நேத்ராய த்வாதசபு ஜாய, தவாதசாத்மகாய
சக்தி ஹஸ்தாய சுப்ரமண்யாய
ஓம் நம: ஸ்வாஹா

## ஸ்ரீ சுப்ரமண்யருடைய த்யானம்

சிந்தூராருண மிந்து காந்தி வதனம்
கேயூரஹாராதிபி:
திவ்யை ராபரணைர் விபூஷித தநும்
சுவர்காதி சௌக்ய ப்ரதம்
அம்போஜாபய சத்தி குக்குட தரம்
ரக்தாங்கராகம் சுபம்
சுப்ரமண்ய முபாஸ்மஹே பரணமதாம்
பீதி ப்ரணாசோத்யதம்

## மரணத்தின் தத்துவம்

மரணத்தைப் பற்றி பெரும்பாலானோர் தப்பான அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர். ஒருவர் இறந்து விட்டால் அவரை இழந்து விட்டதாகக் கருதி, அலறுகின்றனர்.

அறியாமையால் ஏற்பட்ட கருத்து இது. இழத்தல் என்பது நாம் ஒருவகையேனும் அப்பொருளைத் திரும்பப் பெறாத விதமானதாகும். காணமுடியாதவர்கு பறி கொடுத்துவிட்டோம் என்பது கருத்துடையது. ஆனால் மரணமோ அப்ப யானது அல்ல. மரணத்தில் மறைவது பஞ்ச பூதங்களால் ஆன உடலமேயாகும்: அதனுள் குடியிருக்கும் ஆன்மா அழிவதில்லை. இதற்கு தோற்றம் அழிவு கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் செய்த வினைக்கேற்ற இந்தப் பூதவுடல் வினை முடிந்ததும் விழுந்து விடுகின்றது. எஞ்சிய வினைக்குத் தக்கபடி ஓர் புதிய உடலைச் சீவன் எடுத்துக்கொள்கிறது. இதை ஒருவர் சட்டை மாற்றுவதுபோலாகும். நாம் புதிய உடையை அணியும்போது எப்படி மகிழ்ச்சியடைகிறோமோ அதுபோல சீவன் புதிய உடலை எடுக்கும்போது மகிழ்ச்சியடைகிறது.

நாம் அழுது புலம்புவதால் அதன் முன்னேற்றம் தடைப்படுவதுடன் நமது துயரத்திலும் பங்கேற்கும்படி சீவனைக் கீழே இழுக்கிறோம். நம்மில் பலர் இதை அறிவதில்லை.

நாம் அறியாமைக்குக் காரணமாக இருப்பது நமது அன்புக்குரிய உள்ளிருக்கும் ஆன்மாவை நேசியாது அதன் மண்ணாலாகிய சட்டைபோன்ற உடலில் பாசம், நேசம், பற்று வைப்பதாகும் உண்மையில் அறியாப் பொருளான ஆன்மாவை நேசிப்போமாயின் நாம் அதனோடு எக்காலத்தும் தொடர்பு வைத்து இன்புற்றிருக்கலாம். நாம் செய்யும் ஒவ்வொரு செய்யுகையும் நம்மைவிட்டுப் பிரிந்திருக்கும் ஆன்மாவின் சாந்திக்காகவேயாகும்.

அதன் சாந்தியைக் கெடுக்கும் எண்ணமோ செயலோ எதுவும் தவிர்க்கப்படல் வேண்டும். எனவே இறந்தவருக்கு நாம் செய்ய வேண்டிய கடமை இதுவேயாகும்.

அப்பாவே - அம்மாவே - மனைவியே - சகோதர சகோதரியே - மகளே - மகனே - மருமகளே - மருமகனே - மச்சாளே அக்காவே - அரிய சினேக சிநேகிதியே - அயலார்களே நீங்கள் உங்கள் யாக்கையை உதறிச் சென்றீர்கள் - அன்புமிகுந்திருந்தீர்கள் - ஆதரவு காட்டினீர்கள் - எங்களுக்குஇன்பம் தந்தீர்கள். எவர்க்கும் இனியவராய் இருந்தீர்கள். உங்கள் நற்குணம் எங்கள் உயிர் காக்குக ! உள்ளமட்டும் கள்ளமின்றி உங்களைப்போல் எல்லார்க்கும் இனியராய் வாழ்ந்து எங்கள் வினைகள் முடிந்ததும் ஆண்டவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களையும் ஆட்கொள்ளட்டும். கனவு நாடகம் போன்றது. இப்புவி வாழ்வில் போவதும், வருவதும், கூட்டுவதும் பிரிதலும், பழையன கழிந்து புதியன புகுதலும் இயற்கையின் சட்டம். இதை விலக்க ஒருவராலும் முடியாது. இது இறைவன் அருள் ஆணை. அவனே எல்லாருக்கும் அருளட்டும். அமைதி நிலவட்டும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
மௌனம் 5 நிமிடம்

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!
சுப மஸ்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கலாநிதி
கா. கைலாசநாத குருக்கள்
M. A. (Ceylon) Ph. D. (Poona)

# இரங்கலுரை

மாத்தளை கதிர்வேலாயுத சுவாமி என்று யாராவது சொன்னதும் ஞாபகத்திற்கு வருபவர் பிரம்மஸ்ரீ K. பால சுப்ரமணிய சர்மா அவர்களே. தந்தையார் காலம் முதல் முருகனுக்குத் தொண்டு செய்து வரும் பாரம்பர்யமுடையவர். பழகுவதற்கு இனியவர். இனிய சுபாவமுடையவர். முருகனிடம் அகலாத பக்தி மிக்கவர். அவர் கோபங் கொண்டால் எப்படி இருக்கும் என்பதை கற்பனை பண்ணிப் பார்க்கவே முடிகிறதில்லை. அவர், எப்போதும், எல்லோருக்கும் எங்கும் வேண்டியவர். பரோபகாரி.

குடும்பபிரச்சினைகள், தொல்லை தரும் கஷ்டங்கள் மிகுந்தவேளைகளிலும் அவர் உதிக்கும் ஆழ்ந்ததும அர்த்தம் மிக்கதான சிரிப்பு அவற்றை எவ்வளவு எளிதாகக் களைந்து நிம்மதியுறுகிறார் என்பதை உணர்ந்தும். இடுக்கண் வருங்கால் நகுக என்ற மூதுரைக்கு இலக்ஷயமாகத் திகழ்ந்தவர்.

இறுதி தினத்தில் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள குழுமியிருந்த உள்ளன்பர்கள் எண்ணிக்கை பல இன மக்கள் அவரிடம் எவ்வளவு மெய்யன்பு கொண்டிருந்தார்கள் என்பதை உணர்த்தி நிற்கும். இயலாமை காரணமாக என் போன்று தவிர்க்க முடியாது சமூகமளிக்க முடியாதவர் எண்ணிக்கையோ இன்றும் பெறுந்தொகையானது.

அவர் முகத்தில் எப்போழுதும் தவழும் புன்னகையே இன்னும் மனக்கண் முன் நிற்கின்றது.

அவர் ஆன்மா முருகன் திருவடி நீழலின்
அமைதி யுறுவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுக்கோட்டை நகரத்தார் சார்பாக....

காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ க. பாலசுப்ரமண்ய சர்மா அவர்கள் ஐந்தாவது தலைமுறையாக, சுமார் அரை நூற்றாண்டு காலமாக, இவ்வாலயத்தோடு ஒன்றித்து, பூசகராக கடமையாற்றியவர். இவர் இவ்வாலயத்தின் தொன்மையைப் பாதுகாத்து, ஆலய நித்திய பூஜைகளையும் வருடாந்த உற்சவங்களையும் நடாத்தியவர் மாத்தளை வாழ் இந்துப்பெருமக்களினதும், தோட்டப்புற மக்களினதும் கலை கலாச்சார நடவடிக்கைகளுக்கும் இந்து சமய ரீதியிலான கிரியைகள் மூலமாகவும், மற்றும் ஜோதிடக்கலையின் மூலமாகவும், அவர்களிடையே நன் மதிப்பைப் பெற்றவர். அத்தோடு மாத்தளை வாழ் சகல இன மக்களின் சமூகப் பிரச்சினைகளிலும் பங்கேற்றவர்.

அந்தவகையில் அன்னாரின் இழப்பு மாத்தளை வாழ் சகல மக்களுக்கும் ஓர் பேரிழப்பாகும். எம்மை விட்டுப் பிரிந்து சென்ற அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முருகப்பெருமானைப் பிரார்த்திப் போமாக!

ஓம் சாந்தி!

கதிர்வேலாயுத சுவாமி கோவில்,
மாத்தளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி !

எமது இல்ல விளக்கு மருத்துவமனையில் இருந்த போதும், இயற்கை எய்திய போதும், பின்னரும், வருகை தந்து, உதவி நல்கிய உறவினர், நண்பர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர் அனைவர்க்கும் எமது நன்றிகள்.

திருமதி ச. பாலசுப்ரமணிய சர்மா
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*R. Pathmanaba Iyer*
*27-B High Street*
*Plaistow*
*London E13 0AD*
*Tel: 020 8472 8323*

**NEW CENTRAL PRINTERS**
147, Wolfendhal Street,
Colombo-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org